# 06 கூட்டாக ஓதுதல்

## தேவையும் முக்கியமும்

உங்களுடைய குர்ஆன் பயணத்தின்போது, படிப்பதில் தாகம் கொண்ட ஒரு சமூகத்தில் தேடி இணைந்துகொள்வது மிகவும் அவசியமானதாகும். நீங்கள் குர்ஆனைத் தனிப்பட்ட முறையில் படித்து வருவீர்கள். அதில் ஐயமில்லை. ஆனால் குர்ஆனின்பால் நம்பிக்கையும் தேடலும் கொண்ட பிறருடன் இணைந்து கூட்டாக அதனை படிக்கும்போது, நீங்கள் பெறவிருக்கும் நன்மைகள் பல மடங்கு பெருகும். தோழமை உணர்வு காரணமாக, இதயங்கள் ஆழ்ந்த நிலையை அடையும். பல உள்ளங்கள் ஒன்று சேர்வதால், குர்ஆனின் பொருளை நன்றாக, மிகச் சரியாகப் புரிந்துகொள்ள முடியும். பிறருடன் இணைந்து கொள்வதன் மூலமே, குர்ஆன் ஊட்டிய உணர்வில் உங்களது வாழ்க்கையை நீங்கள் அமைத்துக்கொள்ள முடியும். அதில் குறிப்பிட்டுள்ள குறிக்கோள்களை உங்களால் நிறைவேற்ற முடியும். அக்குறிக்கோள்களை நிறைவேற்றுவதன் மூலம், குர்ஆனின் முழுமையான அருட்கொடைகளைப் பெற்றிடும் தகுதியை நீங்கள் பெறுவீர்கள்.

பெரும்பாலும் குர்ஆனின் உரை கூட்டத்தை (சமுதாயத்தை) நோக்கியே அமைந்துள்ளது. நபிகள் நாயகம் (ஸல்) அவர் களுக்கு குர்ஆன் இறக்கியருளப்பட்ட அந்தத் தருணத்திலிருந்து அவர்கள் அதனை மையமாகக் கொண்ட ஒரு சமுதாயத்தை உருவாக்கி தமது வாழ்வில் ஒவ்வொரு தருணத்தையும் அதன் மேம்பாட்டிற்காகவே செலவழித்தார்கள். 'ஓதுங்கள்' என்ற அறிவுறுத்தலைத் தொடர்ந்து அவர்களுக்கு 'எழுங்கள் எச்சரிக்கை செய்யுங்கள்' என்ற கட்டளைகளும் வந்தன. உங்களுடைய எஜமானனால் அருளப்பட்டுள்ள இந்த நூலில் உள்ளவற்றைத் தொடர்ந்து ஓதுங்கள் என்ற கட்டளையைப்

பின்தொடர்ந்து **"எவர் தம்முடைய இறைவனின் திருப்தியை நாடி காலையிலும் மாலையிலும் அவனை அழைக்கின் றார்களோ, அவர்களுடன் சேர்ந்து இருப்பதில் உமது மனத்தை திருப்திக்கொள்ளச் செய்வீராக! ஒருபோதும் உமது பார்வையை அவர்களை விட்டுத் திருப்ப வேண்டாம்" (திருக்குர்ஆன் 18 : 27, 28)** என்ற கட்டளைகளும் வந்தன. குர்ஆனின் இந்த போதனைகள் ஓதுவதற்கும், அந்த ஓதுதலின் அடிப்படையில் உருவான நன்கு ஒன்றிணைக்கப்பட்ட ஒரு சமூகத்தைக் கட்டமைப்பதற்கும் துணை புரிந்தது.

குர்ஆன் ஓதப்படாமல் தொழுகை நிறைவு பெறுவதில்லை. அனைவரும் இணைந்து நடத்துகின்ற 'ஜமாஅத் தொழுகை' இஸ்லாத்தில் கட்டாயமாக்கப்பட்டுள்ளது. (அப்படிச் செய்யாம லிருப்பதற்குத் தகுந்த காரணங்கள் இருந்தாலொழிய). குர்ஆனைக் கேட்டு, அதனைப் புரிந்துகொண்டு, அதுபற்றிச் சிந்திக்காவிட்டால், தொழுகையின்போது குர்ஆன் ஓதுவதன் நோக்கம் நிறைவேறாது. இவ்வாறாக ஒரு நாளைக்கு ஐந்து தடவை தொழுகையைக் கூட்டாக (ஜமாஅத்தாக) நிறைவேற்ற வேண்டும்.

குர்ஆனின் செய்தியை மனிதகுலம் அனைத்திற்கும் கொண்டு செல்ல வேண்டுமென்ற கடமையானது, அதனைக் கூட்டாக ஓதி விளக்கிச் சொல்ல வேண்டும் என்ற கடமையையும் உள்ளடக்கிய தாகும். 'திலாவா' என்ற வார்த்தையை அரபு முன்னிடைச் சொல்லுடன் பயன்படுத்துகின்ற போது "அலா" என்பதற்கு அறிவித்தல், பிரச்சாரம் செய்தல், பரப்புதல், போதித்தல் ஆகிய பொருள்கள் உள்ளன. இந்த வழிமுறையில் திலாவா செய்வது நபித்துவத்தின் அடிப்படையான முக்கியப் பணிகளில் ஒன்றாகும். (திருக்குர்ஆன் 2:129,151). குர்ஆனின் அத்தியாயமான அல் ஜுமுஆவில் (62) இறைவழிகாட்டுதல் களைப் புரிந்து கொள்ளாமல் இருப்பதையும் வெள்ளிக்கிழமை ஜும்ஆ தொழுகையை நிறைவேற்றாமல் இருப்பதுடன் இணைத்துப் பேசப்பட்டுள்ளது.

குர்ஆனை வீடுகளில், குடும்பத்தினருடன் ஓத வேண்டும் என்பதைக் கீழ்க்கண்ட குர்ஆன், நபிமொழிகள் அறிவிக்கின்றன.

**''உங்களது வீடுகளில் ஓதப்படுகின்ற இறை வசனங்களையும் விவேகமான விஷயங்களையும் நினைவில் வையுங்கள்.''**

**(திருக்குர்ஆன் 33:34)**

''ஒன்று சேர்ந்து குர்ஆனை ஓதி ஆய்வு செய்கின்றவர்களின் மீது இறைவனின் அளப்பரிய கருணையுடன் வந்து மலக்குகள் அருள் பொழிகிறார்கள்'' என்று நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் நவின்றுள்ளார்கள். (முஸ்லிம்)

எனவே நீங்கள் தனிப்பட்ட முறையில் குர்ஆன் ஓதுவதோடு, திருப்தியடைந்து விட வேண்டாம். தேட்டம் கொண்ட மற்றவர்களையும் அழைத்து அனைவரும் ஒன்று சேர்ந்து ஓதி வாருங்கள்.

## கூட்டாக ஓதுவதற்கான வழிமுறைகள்

கூட்டாக ஓதுவதற்கு இரண்டு வழிமுறைகள் உள்ளன.

ஒன்று: சிறு குழு ஒன்று அமைத்து, குர்ஆன் ஓதி விவாதிப்பது. இம்முறையில் கலந்துகொண்ட ஒவ்வொருவரும் தமது பங்களிப்பைச் செய்திட முடியும். அவர்களில் குர்ஆனை நன்கு கற்றறிந்த ஒருவர் இருந்தால் அவரே அக்குழுவை வழி நடத்தலாம். இதற்கு ஹல்கா - படிப்பு வட்டம் என்று பெயர்.

இரண்டு: ஒரு குழு சிறியதாகவோ பெரியதாகவோ இருக்கலாம். அதனைச் சார்ந்தவர்கள் ஒன்று கூடி அமர்ந்திருக்கக் கற்றறிந்தவர் ஒருவர் அவர்களுக்கு விளக்கம் அளிக்கிறார். பங்கேற்றவர்கள் கேள்விகளை மட்டுமே எழுப்புகிறார்கள். இது 'தர்ஸ்' (பாடம் அல்லது விரிவுரை) என்று அழைக்கப்படுகிறது.

ஒரு படிப்பு வட்டம் எப்படி நடத்தப்படவேண்டும்? எப்படி அதில் பாடம் அல்லது விரிவுரை நிகழ்த்தப்பட வேண்டும் (தர்ஸ்) என்பது பற்றி நீங்கள் நன்கு அறிந்திருக்க வேண்டும். இங்கு நாம் சில குறிப்பிட்ட வழிமுறைகளைப் பற்றியே விளக்க இருக்கிறோம். இதற்குக் குறிப்பிட்ட தரமோ நிர்ணயிக்கப்பட்ட செயல்முறைத் திட்டங்களோ இல்லை என்பதை நாம் நினைவில்



CamScanner

வைத்துக்கொள்ள வேண்டும். ஒவ்வொருவரும் ஒவ்வொரு குழுவும் தங்களுக்கென ஒரு முறையை வகுத்துக் கொண்டு அவரவர்களுக்கு ஏற்ற சூழ்நிலைகளுக்கு ஏற்பச் செயல்பட வேண்டும். சில வழிகாட்டி நெறிமுறைகள் கீழே கொடுக்கப் பட்டுள்ளன. உங்களது தேவைகளுக்கும் திறமைகளுக்கும் ஏற்ப அவற்றை நீங்கள் பயன்படுத்திக்கொள்ளலாம்.

ஒன்று: உங்களது பொறுப்புகளை நிறைவேற்றுவதற்கு வேண்டிய அனைத்து ஏற்பாடுகளையும் நீங்கள் செய்திட வேண்டும். உங்களது பணிகளை எளிதாகக் கருதாதீர்கள். கடைசி நிமிடம் வரை உங்களது பணிகளை ஒத்தி வைக்காதீர்கள். ஒரு மேலோட்டமான பார்வை போதும் எனக் கருதாதீர்கள். முழுமையாகப் பரிசீலிக்காமல் குர்ஆனைப் பற்றி எதுவும் சொல்ல வேண்டாம். நீங்கள் என்ன ஓதியுள்ளீர்கள் என்பது பற்றியும் என்ன சொல்ல விரும்புகிறீர்கள் என்பது பற்றியும் குறிப்பெடுத்துக் கொள்ளுங்கள்.

இரண்டு: நீங்கள் ஒன்றும் தெரியாதவராக இருந்தாலும் சரி அல்லது ஏற்கனவே அறிந்தவராக இருந்தாலும் சரி, நீங்கள் விரிவுரை வழங்க வேண்டியிருந்தாலும் சரி, அல்லது படிப்பு வட்டத்தில் நடைபெறும் விவாதங்களில் பங்கேற்பவராக இருந்தாலும் சரி, சில குறிப்பிட்ட பகுதிகளை இதற்கு முன்னர் இந்நூலில் சொல்லப்பட்டுள்ள வழிகாட்டுதல்களின்படி நீங்கள் சுயமாகப் படித்துத் தெரிந்துகொள்ள வேண்டும்.

மூன்று: இறைவனின் மகிழ்ச்சியைப் பெறுவதற்காக குர்ஆனை ஓதிப் புரிந்துகொள்கின்ற எண்ணத்தை எப்போதும் கொண்டிருங்கள்.

நான்கு: வெறும் மகிழ்ச்சிக்காகவோ, அறிவைத் தேடும் ஆர்வத்திலோ, விவாதிப்பதற்காகவோ ஒன்றுகூடி குர்ஆனை ஓதிட வேண்டாம். குர்ஆனை நீங்கள் கூட்டாக ஓதுவது, அதன் செய்திகளுக்குக் கீழ்ப்படிந்து நடப்பதற்கும், அது உங்களிடம் ஒப்படைத்துள்ள குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்காகவும் மட்டுமே இருக்க வேண்டும்.

## படிப்பு வட்டம்

குழுப் படிப்பு பயனுள்ளதாக அமைந்திட பின்வரும் வழிகாட்டுதல்கள் கவனத்தில் கொள்ளப்பட வேண்டும்.

## பங்கேற்பாளர்கள்

ஒன்று: அறிவிலும் அறிந்துகொள்ளும் திறனிலும் அதிக வேறுபாடு காண இயலாத மூன்று முதல் பத்து நபர்கள் வரை பங்கேற்பாளர்களின் எண்ணிக்கை இருக்க வேண்டும். இதற்குக் குறைவாக எண்ணிக்கை இருப்பது அதனை ஒரு உரையாடலாக மாற்றிவிடும். இதற்கு அதிகமாக இருப்பது, பங்கேற்பாளர்களின் தீவிரப் பங்களிப்பைக் குறைத்துவிடும்.

இரண்டு: செய்திக்கும் உள்ளடக்கத்திற்கும் முக்கியத்துவம் கொடுக்கப்பட வேண்டும். பாடங்களும், வழிகாட்டு நெறிகளும் வரைமுறை செய்யப்பட வேண்டும். யதார்த்த வாழ்க்கைக்குப் பொருத்தமற்ற விஷயங்களில் அதிகம் சிக்கிக் கொள்ளக்கூடாது.

மூன்று: குழுவின் உறுப்பினர்கள் அனைவரும் தங்களது நோக்கங்கள், வரையறைகள், செயல்முறைகள் ஆகியன பற்றி தெளிவாகத் தெரிந்திருக்க வேண்டும்.

நான்கு: தாங்கள் மேற்கொண்டுள்ள பணிக்கு அவர்கள் ஈடுபாடு உடையவர்களாக இருக்க வேண்டும். நேரம், கவனம், கடின உழைப்பு முக்கியமென்பதை அவர்கள் உணர்ந்துகொள்ள வேண்டும். குறிப்பாக முறையான தயாரிப்பும் வருகையும் முக்கியமானவையாகும்.

ஐந்து: குர்ஆனை ஓதுவதற்கான வழிமுறைகளை அவர்கள் தெரிந்திருக்க வேண்டும். அதற்கு இந்த நூலைப் படிப்பது பயனுள்ளதாக இருக்கும்.

ஆறு: அவர்கள் அந்நியர்களைப்போல் அமர்ந்திருக்கக் கூடாது. ஆனால் குர்ஆனின் மேல் நம்பிக்கை கொண்டிருக்கிற, அதனைப் புரிந்துகொண்டு அதற்குக் கீழ்ப்படிந்து நடக்கின்றதில் முழு ஈடுபாடு உணர்வு கொண்ட சகோதரர்களைப்போல் அவர்கள் இருக்கவேண்டும்.



CamScanner

## எப்படி நடத்துவது?

ஒன்று: முதலில் ஓர் உறுப்பினர் தாம் ஓதியதன் முடிவைப் பற்றிய குறிப்பைச் சமர்ப்பிக்க வேண்டும்.

இரண்டு: மற்றவர்கள் அவருடன் சேர்ந்துகொண்டு அதனை விரிவுபடுத்தவும், திருத்தங்கள், மாற்றங்கள் செய்யவும், கேள்விகள் எழுப்பவும் வேண்டும். கேள்விகளுக்குத் தக்க பதில்கள் அளிக்கப்பட வேண்டும்.

மூன்று: அனைத்து உறுப்பினர்களும் ஓத வேண்டுமென்றால், யார் அதனைத் தொகுத்து வழங்க வேண்டுமென்பதை முதலிலேயே தீர்மானித்துக் கொள்ள வேண்டும். அதற்காக ஒருவரை நியமிக்க வேண்டும். இது நன்முறையில் தொகுத்து வழங்கப்படுவதை உறுதி செய்யும். இதற்கு வாய்ப்பு இல்லாத நிலையில் குழுவிலுள்ள யாரேனும் ஒருவரை இந்தப் பணிக்கு நியமிக்கலாம். இது அனைவரும் விழிப்புடனிருக்கவும் கடினமாகப் பணியாற்றவும் துணை புரியும்.

நான்கு: வட்டத்திலுள்ளவர்களில் யாரேனும் ஒருவர் அதிக அறிவு பெற்றவராகவும், அதிகத் தகவல்கள் வழங்கத் தக்கவராகவும் இருப்பது மிகவும் பயனுள்ளதாக இருக்கும். அவர், விவாதத்தின் போது சமர்ப்பிக்கப்பட்டவற்றிலுள்ள குறைபாடுகளையும் தவறுகளையும் சரிசெய்யும் வல்லமை பெற்றவராக இருப்பார். அவரால் விவாதத்தின் தன்மையையும், போக்கையும் தீர்மானித்துச் சரியான முறையில் அதைக் கொண்டு செல்ல முடியும்.

ஐந்து: பங்கேற்றுள்ளவர்களில் யாரேனும் ஒருவர் குர்ஆனைப் பற்றி நன்கு அறிந்தவராக இருந்தால், அவர் தொடக்கத்திலேயே குறுக்கிடக்கூடாது. பிற பங்கேற்பாளர்கள் சொல்ல விரும்புகின்ற வற்றைச் சொல்ல அனுமதித்துவிட்டு பின்னர் அதில் ஏதேனும் தவறுகள் இருந்தால் அவர் அதனைத் திருத்த முயலலாம். அல்லது பங்கேற்பாளர்கள் தெரிந்துகொள்வதற்காக மேலும் தகவல்களை அளிக்கலாம். அவரது செயல்முறை ஆலோசனை யாகவும், எழுப்பப்படுகின்ற கேள்விகளுக்குப் பதில் சொல்கின்ற

முறையாகவும் இருக்க வேண்டுமே தவிர, தீவிர விவாத முறையாக இருக்கக்கூடாது.

ஆறு: முடிவில், ஓர் உறுப்பினர் குறிப்பாகத் தலைவர் அல்லது ஆசிரியர் அன்று பேசப்பட்ட செய்திகள், முக்கியப் பொருள்கள், செய்ய வேண்டிய வழிமுறைகள் பற்றி தொகுப்புரை ஒன்று வழங்க வேண்டும்.

## தர்ஸ்

பின்வரும் வழிமுறைகள் 'தர்ஸ்' பயனுள்ளதாக அமைந்திடத் துணை செய்யும்.

## தயாரிப்பு

ஒன்று: பங்கேற்பாளர்களின் அறிவு, அறியும் திறனின் தன்மை, ஈமானின் நிலை, அவர்களின் பிரச்னைகள், கவலைகள், தேவைகள் ஆகியன பற்றிய தெளிவான கண்ணோட்டம் இருக்க வேண்டும்.

இரண்டு: நீங்கள் விரும்புகின்ற பகுதியைத் தேர்ந்தெடுத்து விளக்கிச் சொல்வதைவிட, பங்கேற்பாளர்களின் நிலைக்கும் தரத்திற்கும் தக்க பகுதிகளைத் தேர்வு செய்துகொள்ளுங்கள்.

மூன்று: பங்கேற்பாளர்களின் தன்மைக்கு ஏற்ப உங்களது மொழியும், நடையும், விளக்கமும் அமைந்திட வேண்டும்.

நான்கு: குர்ஆனின் உண்மையான செய்தியைப் பங்கேற்பாளர்களுக்குத் தெரிவித்திட இறைவனின் உதவியை நாடி இறைஞ்சுங்கள்.

ஐந்து: குறிப்பிட்ட பகுதியை ஓதி, நீங்கள் சொல்ல விரும்புவது என்ன? எந்த முறையில்? எப்படித் தொடங்குவது? எப்படி முடிப்பது? என்று குறிப்பெடுத்துக்கொள்ளுங்கள்.

ஆறு: உங்களுக்கு வழங்கப்பட்டுள்ள நேரத்தைக் கவனத்தில் எடுத்துக்கொள்ளுங்கள். நீங்கள் சொல்ல வேண்டிய பல செய்திகள் இருக்கலாம். அவை அனைத்தையும் ஒரேயடியாகக்

கொட்டிவிட வேண்டுமென்ற ஆர்வமும் உங்களிடம் இருக்கலாம். ஆனால், பங்கேற்பாளர்கள், நீங்கள் கூறுகின்ற அனைத்து விஷயங்களையும் கேட்டு உள்வாங்கிக்கொள்ள முடியாதவர்களாக இருக்கிறார்கள் என்பதை நினைவில் வைத்திருங்கள். அவர்கள் உங்களுடைய ஆழ்ந்த அறிவையும், புலமையையும் புகழ்ந்துரைக்கலாம். ஆனால் அவர்கள் அதிகம் கற்றுக்கொள்ள முடியாதவர்களாக இருப்பர்.

நீளமான பகுதிகளை நீங்கள் குறுகிய நேரத்தில் விளக்கிச் சொல்லிவிடலாம். அதே நேரத்தில், குறுகிய பகுதிகளை விளக்கிட உங்களுக்கு நீண்ட நேரம் பிடிக்கலாம். இவை அனைத்தும் நீங்கள் ஓதக்கூடிய பகுதியிலிருந்து என்ன கூற விரும்புகிறீர்கள் என்பதைப் பொறுத்தே அமையும்.

ஏழு: தெளிவான செய்தி அல்லது செய்திகள் என்ன என்பதில் முழு கவனம் செலுத்துங்கள். நீங்கள் எந்த செய்திகளைக் கூறினாலும், பங்கேற்பாளர்கள் எந்த செய்திகளை தங்கள் உள்ளத்தில் கொண்டு சிந்தித்துச் செயல்பட வேண்டுமென்று நீங்கள் விரும்புகின்றீர்களோ அந்தச் செய்திகளுக்கு முன்னுரிமை கொடுங்கள்.

இவை அச்செய்திகளின் மையக் கருத்தை ஒட்டியிருக்க வேண்டுமே தவிர, உங்களுடைய சொந்த விருப்பங்களின் அடிப்படையில் இருந்திடக்கூடாது.

## எப்படிச் செய்வது?

ஒன்று: உங்களுக்கு இரண்டு நோக்கங்கள் இருக்க வேண்டும். முதலாவதாக, அல்லாஹ்வின் செய்தியைப் பிறருக்குக் கொண்டு செல்கின்ற கடமையில் ஈடுபட்டுள்ள நீங்கள் அவனுடைய மகிழ்ச்சியை நாடிப் பெறுவது. இரண்டாவதாக, குர்ஆனின் செய்தியை உறுதியாகவும் தெளிவாகவும் தெரிவிப்பது.

இரண்டு: நீங்கள் அறிவிக்கின்ற செய்தி கேட்பவர்களின் இதயத்தையும் உள்ளத்தையும் சென்றடைவது அல்லாஹ்வின் கைகளிலேயே உள்ளது என்பதை நினைவுகூருங்கள்.

ஆனால் இது, நீங்கள் உங்களால் முடிந்த அளவிற்குத் தயாரிப்பில் ஈடுபடுவதற்கும், அவர்களது பிரச்னைகளுக்கும், சூழ்நிலைகளுக்கும் பொருத்தமான முறையில் இறைவனின் செய்திகளை உயிரோட்டத்துடனும், உத்வேகத்துடனும் கொண்டு செல்வதற்குமான பொறுப்பிலிருந்து உங்களை விடுவிக்காது.

உங்களுடைய உரை நாவன்மை கொண்டதாகவோ, இனிமையானதாகவோ இருக்க வேண்டும் என்று கட்டாய மில்லை. சாதாரணமாக இருந்தால்போதும். ஆனால் உங்களுடைய எண்ணமும், முயற்சியும்தான் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.

மூன்று: முதலில் நீங்கள் முழுப் பகுதியையும் ஓதி, அதன் மொழிபெயர்ப்பை எடுத்துக்கூறி, பின்னர் ஒவ்வொரு வசனத்தையும் ஓதியோ ஓதாமலோ அதனுடைய மொழிபெயர்ப்பை மீண்டும் எடுத்துக்கூறி விளக்கமளிக்கலாம். அல்லது ஆரம்பத்தில் ஒரு சிறிய முன்னுரையை வழங்கிவிட்டு பின்னர் ஒவ்வொரு வசனத்தையும் அல்லது வசனங்களின் தொகுப்பையும் எடுத்துக்கொண்டு விளக்கமளிக்கலாம். நீங்கள் என்ன முறையைக் கையாள வேண்டுமென்பது சூழ்நிலையையும் உங்களுக்குக் கிடைக்கின்ற நேரத்தையும் பொறுத்து அமையும்.

நேரம் குறைவாக இருந்தால், ஆரம்பத்திலேயே முழுப் பகுதியையும் ஓதிப் பின்னர் அதற்குரிய மொழிபெயர்ப்பை வழங்க வேண்டுமென்பது அவசியமல்ல. பங்கேற்பாளர்கள் என்ன கேட்கப்போகிறார்கள் என்பதைப் பற்றிய விஷயங்களைத் தயாரிப்பதில் உங்களது நேரத்தைச் செலவிடுங்கள்.

நான்கு: தனித்த வசனங்கள் அல்லது வசனங்களின் தொகுப்பு பற்றிய விஷயங்களில் நீங்கள் பல்வேறு விதமான அணுகுமுறை களை மேற்கொள்ளலாம். குறுகிய வசனங்களாக இருந்தால், முதலில் அவற்றை ஓதிவிட்டுப் பின்னர் விளக்கிச் சொல்லலாம். உங்களது விவாதத்திற்கு முன்னரும் பின்னரும் நீங்கள் எடுத்துக்கொண்ட முதன்மை விஷயத்திற்கு வந்துவிட வேண்டும். கேட்பவர்கள் ஒத்திசைவு உணர்வுடன் இருக்கிறார்கள்

என்பதை நீங்கள் உறுதி செய்துகொண்டு செய்திகளை ஒன்றன் பின் ஒன்றாக விளக்கிக் கூறலாம்.

ஐந்து: முடிவில் நீங்கள் கூறிய செய்திகளின் சுருக்கத்தையும் அதனுடைய முக்கியத்துவத்தையும் தொகுத்து வழங்க வேண்டும். நேரமிருந்தால் முழுப் பகுதியையும் அல்லது அதன் மொழிபெயர்ப்பையும் மீண்டும் ஓதிக் காட்டுங்கள். ஏற்கனவே உங்களது விளக்கத்தைக் கேட்டு குர்ஆனின் செய்தியைப் புரிந்துகொண்டவர்கள் மீண்டும் அதைக் கேட்கின்றபோது அவர்களுக்குக் குர்ஆனுடன் நேரடித் தொடர்பு ஏற்பட்டுவிடும்.

ஆறு: குர்ஆன்தான் உங்களிடம் பேசும். நீங்கள் அதனுடன் பேசமாட்டீர்கள். இது பற்றி எப்போதும் எச்சரிக்கையாக இருங்கள். அதனுடைய மொழியையும், இறைவனின் தூதரையும் நன்கு அறிந்தவர்களுக்கு, குர்ஆன் எந்தவிதமான விளக்கவுரை யும் இல்லாமலேயே மிகுந்த பயனளிக்கும். இப்போதும் அப்படியே இருக்கிறது. உங்களுடைய சொந்தக் கருத்துகளை அளவுக்கு அதிகமாக அதனுள் புகுத்துவதன் மூலமாகவும் அல்லது அதற்கு நீண்ட விளக்கங்கள் அளிப்பதன் மூலமாகவும் நீங்கள் குர்ஆனுக்குத் தடை போட முயற்சி செய்கிறீர்கள். நீங்கள் விரிவான விளக்கங்களை அளிக்கின்றபோது குர்ஆனின் உள்ளடக்கச் செய்திகளை மறந்துவிடுகிறீர்கள்.

ஆகையால், முதலாவதாக, உங்களது விளக்கம் கூடுமான வரை சுருக்கமாக இருக்க வேண்டும். இரண்டாவதாக, சில சமயங்களில் விளக்கம் விரிவான முறையில் இருக்க வேண்டு மென நீங்கள் கருதினால் அது தவறல்ல. ஆனால், உள்ளடக்கத் தின் பக்கம் விரைவாக வந்துவிட வேண்டும். குர்ஆனின் உள்ளடக்கத்திற்கும் அதனைக் கேட்பவர்களுக்குமிடையில் பொருளில் மட்டுமல்ல, அதனைக் கேட்பதிலும் நீங்கள் தூரத்தை ஏற்படுத்தி விடக்கூடாது.

ஏழு: குர்ஆனின் அமைப்பிற்கும் நடைக்கும் தகுந்தாற்போல் உங்களுடைய விளக்கவுரையை அமைத்துக்கொள்ளுங்கள். நிகழ்ச்சியின் வெற்றியை உறுதிசெய்ய அது மிகவும் பயனுள்ள ஒரு முறையாக இருக்கும்.

தொடக்கத்தில் இது உங்களுக்குச் சிரமமாகத் தோன்றலாம். ஆனால், நீங்கள் குர்ஆனுக்கு மிகவும் நெருக்கமாகி அதனை அடிக்கடி ஓதி மனப்பாடம் செய்யும் போது அது உங்களுடைய வாழ்க்கையின் ஒரு அம்சமாக மாறிவிடும்.

குர்ஆனின் நடையில் காணப்படும் சில குணாதிசயங்களை நீங்கள் நினைவில்கொள்ள வேண்டும். முதலாவதாக, அது நியாயத்திற்கும், உணர்விற்கும், ஞானத்திற்கும், ஆன்மாவிற்கும் ஒட்டுமொத்தமாக முறையீடு செய்கிறது. இரண்டாவதாக, அது சுருக்கமாகவும், நேரடியாகவும், தெளிவாகவும் தனிப்பட்டதாக வும் இருக்கிறது. மூன்றாவதாக, அது கேட்பவர்களின் விருப்பங்களையும் முடிவுகளையும் எதிர்கொண்டு, அதனைக் கேட்கவும் அதன்படிச் செயல்படவும் ஊக்கமளிக்கிறது.

நான்காவதாக, அதன் செய்தியைப் போலவே, அதன் மொழியும் உங்களுடைய உள்ளத்தினுள் ஊடுருவிச் செல்லும் அளவிற்கு சக்திமிக்கதாக உள்ளது. ஐந்தாவதாக, தன்னைக் கேட்பவர்கள் புரிந்துகொள்ளும் விதத்திலேயே அதன் வாதங்கள் அமைந்துள்ளன. அவர்களின் அன்றாட அனுபவங்களின் அடிப்படையிலேயே அது அமைந்துள்ளது. அவர்களுக்குள் எப்போதும் எதிரொலியை உருவாக்குகிறது. அது சுலபத்தில் அறிந்துகொள்ள முடியாததல்ல; தர்க்க சாஸ்திரமல்ல. யூகமானதுமல்ல.

எட்டு: அதிகத் தகவல் கொண்ட தொகுப்பு அறிக்கை களையோ, குர்ஆனின் வலிமையான தாக்கத்தைச் செயலிழக்கச் செய்யும்வண்ணம் பொதுவான கருத்துகளையோ கூறிட வேண்டாம். ஆனால், குர்ஆனின் செய்தியைப் பங்கேற்பாளர் களிடம் கொண்டுசெல்வதற்கு கருத்துகளும், முறையான அறிமுகமும் தேவை. அவை சாதாரண மொழிநடையில், பங்கேற்பாளர்கள் புரிந்துகொள்ளத்தக்க அளவில் இருக்க வேண்டும். செயல்படுவதற்கான அழைப்பு, ஈடுபாட்டிற்கான உத்தரவு ஆகியன தர்ஸின் அவசியமான அம்சங்களாகும். இயற்கை, வரலாறு, அறிக்கை, உரையாடல், அல்லது உரை அது எதுவாக இருந்தாலும் அனைத்திற்குமே பதிலளிப்பதற்கான

அழைப்பும், முன்வந்து முடிவெடுத்து செயல்படுவதற்கான அழைப்பும் இறுதியில் விடுக்கப்பட வேண்டும்.

ஒன்பது: உங்களது சொந்தக் கருத்துகளை எடுத்துக் கூறிட குர்ஆனைப் பயன்படுத்த வேண்டாம். இறைவனின் வார்த்தையை விளக்கிச் சொல்பவர் என்ற நிலையில் நீங்கள் செயல்பட வேண்டும்.

பத்து: குர்ஆன், அதனைக் கேட்பவர்களின் உள்ளத்தைச் சென்றடையட்டும். அதில் தங்கியிருக்கட்டும். அச்சம், நன்றி, அன்பு, அங்கீகாரம் ஆகிய உணர்வுகள் கேட்பவர்களின் உள்ளத்தில் கிளர்ச்சியை ஏற்படுத்தட்டும். அதுவே தர்ஸின் முக்கிய நோக்கமாக இருக்கவேண்டும்.

பதினொன்று: பங்கேற்பாளர்கள் எப்படி நீங்கள் கூறுகின்ற வற்றைச் செவிமடுத்துக் கேட்கிறார்கள் என்பதில் கவனம் செலுத்துங்கள். நீங்கள் கூறுகின்ற விஷயங்களில் அவர்கள் நாட்டம் செலுத்தவில்லை என்றாலோ அது அவர்களது உணர்வைத் தூண்டவில்லை என்றாலோ நீங்கள் உங்களது வாதங்களைக் குறைத்துக்கொள்ளுங்கள் அல்லது தகுதியானவை என்று நீங்கள் கருதுகின்ற விஷயங்களைக் கூறுவதை நிறுத்தி விடுங்கள். சூழ்நிலைக்கும் தேவைக்கும் ஏற்ப எது அவசியம் என நீங்கள் நினைக்கின்றீர்களோ அதனைப் பொறுத்து புதிய அம்சங்களையும், நடைமுறைகளையும் அறிமுகப்படுத்திக் கொள்ளுங்கள்.

★ ★ ★